3

# பூத்துக்கிடக்கும் காடு

பூத்துக் கிடக்குது காடு - கண்டு
பூரித்துப் பரவச மானேன்
காத்துக் கிடந்ததுக் கேற்ப - இந்தக்
காடு செழித்து வளர்ந்தது பாரு.

நேற்றும் அதற்குள்ளே போனேன் - என்
நெஞ்சை இழந்து வெறிகொள்ள லானேன்.
காற்று என்னுடன் பேசும் - செஞ்சொல்
கவிவந்து என்முன்னே வீசும்

நெஞ்சில் சுமையுடை யோரும் - வாழ்வில்
நிம்மதி யின்றி அலைக்கழிவோரும்
கொஞ்சம் இதற்குள்ளே வாரும் - ஞானம்
குடிகொண்டால் யாவும் தானாக ஓடும்!

பஞ்சம் பறந்துடன் போகும் - எம்மை
பற்றிய இருள்யாவும் இனிஓடிச் சாகும்
வஞ்ச மனமுடையோரும் நம் - இதற்குள்
வந்தாலே போதும் புதுத்தெம்பேறும்

எட்டி நடந்துநீ வாரும் - இன்னும்
ஏனங்கே தாமதம் கொள்கிறாய் காணும்
முட்டி உடைந்தது போதும் - இனியும்
மூளையைப் போட்டு உடையாது சேரும்.

அறிவுப் பசுப்பால் குடிப்போம் - எமக்கு
அருகிலே உள்ள கனியையும் கடிப்போம்
நெறியிலே நாம் இனிக் களிப்போம் - உள்ள
வேதனை யாவையும் இப்போதே மறப்போம்!

பாட்டுக்கு பஞ்சமே இல்லை - கெட்ட
பாதகராலே எமக்கில்லை தொல்லை!
ஏட்டுக்கு தானுண்டு வேலை - அதை
எடுத்தினி விரைந்து வாருங்கள் காலை

*அன்பு முகையதீன்*
*'வட்ட முகம் வடிவான கருவிழிகள்'*



இலவச விநியோகத்திற்காக